செ.வெ.எண் :649 நாள்: 04.10.2021

**தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் இன்று(04.10.2021) பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:-

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மஹால் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இப்பணிகளை விரைவாகவும் தரமாகவும் முடித்திட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது மேலும் சரஸ்வதி மஹால் நூலகம், அருங்காட்சியகம், வளாகம் உட்கூரை மற்றும் வெளி கூரை ஆகியவை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது மேலும் நூலக வளர்ச்சி திட்ட பணிகளுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு தேவையான நிதியை பெறுவதற்கு தமிழக அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்க சம்பந்தப்பட்ட அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின்போது நிர்வாக அலுவலர் திருமதி.ஞான கௌரி, உதவி பொறியாளர் திரு.திலீபன், கலைக்கூட காப்பாட்சியர் திரு.சிவகுமார், நூலகர் திரு.சுதர்சன், கணக்கு அலுவலர் திரு.பாலசுப்பிரமணியன், முனைவர்.மணிமாறன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**